தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

மன்மத, ஆவணி 10, திருவள்ளுவர் ஆண்டு–2046

2015 ஆகஸ்ட் 27, வியாழக்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும்
வல்லரணும் நாட்டிற்கு உறுப்பு."

ஊற்று நீர், மழை நீர் ஆகிய இருவகை நீர் வளமும், மலை வளமும், அதிலிருந்து அருவியாகக் கொட்டி ஆறாகப் பெருகிவரும் ஆற்று நீர் வளமும், வலிமைமிக்க கோட்டையும் ஒரு நாட்டின் உறுப்புகள் ஆகும்.

1. வினாக்கள்–விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள். வினா வரிசை எண் 151, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. ஆறுக்குட்டி, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

151—

வீட்டுமனைப் பட்டா

***47654—திரு. வி.சி. ஆறுக்குட்டி:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கவுண்டம்பாளையம் தொகுதியில் சரவணம்பட்டி, அண்ணா நகர், வையம்பாளையம் கிராமம் ஆகிய பகுதிகளில் வசிப்பவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2015 ஆகஸ்ட் 27

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) காலம் காலமாக மறுக்கப்பட்டு வந்த தமிழகத்தினுடைய ஜீவாதார உரிமைகளையெல்லாம் தன்னுடைய அயராத உழைப்பால் மீட்டுத் தந்து தமிழினத்தைக் காத்து நிற்கிற தமிழர் குலசாமி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களைப் பணிந்து வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கோயம்புத்தூர் மாவட்டம், கவுண்டம்பாளையம் தொகுதி, சரவணம்பட்டி, அண்ணா நகர் பகுதிகளில் குடியிருந்துவரும் 75 நபர்கள், கிராம ஆவணங்களில் நீர்நிலைப் புறம்போக்கு என வகைப்பாடு செய்யப்பட்டுள்ள நிலத்தில் குடியிருந்து வருவதால், அவர்களுக்குப் பட்டா வழங்க இயலாது என்பதையும், கோயம்புத்தூர் மாவட்டம், அன்னூர் வட்டம், வையம்பாளையம் கிராமத்தில் குடியிருந்துவரும் 17 நபர்கள் அரசுக்குச் சொந்தமான நத்தம் புறம்போக்கு நிலத்தில் குடியிருந்து வருவதால், அவர்களுக்குப் பட்டா வழங்கிட வாழும் மனித தெய்வம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய புனித அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. ஆறுக்குட்டி அவர்கள்.*

திரு. வி.சி. ஆறுக்குட்டி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆணி வேரின் காவலே, அணுகும் மக்களின் கோவிலே, துணிவுடன் வாழும் வீரமே, தூய்மையுடன் ஆளும் தெய்வமே, பாமர மக்களின் விளக்கிலே, பட்டா வழங்கி ஒளியேற்றும் எங்கள் வேதமே, உமைத் தீண்டுவோர் இங்கு வென்றதில்லை என்ற அடிப்படையிலே மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பாதம் தொட்டு வணங்குகிறேன்.*

என்னுடைய கவுண்டம்பாளையம் தொகுதிக்குட்பட்ட பகுதியிலே மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியோடு இதுவரை 1,200 பயனாளிகளுக்கு

2015 ஆகஸ்ட் 27]

விலையில்லா வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்பதைப் பதிவு செய்து, பட்டா வழங்க ஆணையிட்ட மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் என் சார்பாகவும், தொகுதி மக்களின் சார்பாகவும் நெஞ்சார்ந்த நன்றியைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கவுண்டம்பாளையம் தொகுதியிலே மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய தொலைநோக்குத் திட்டமான அரசின் விலையில்லா மிக்ஸி, கிரைண்டர், மின் விசிறி இந்த மூன்றும் 95,000 பயனாளிகளுக்கு தொகுதி முழுவதும் வழங்கப்பட்டுள்ளன என்பதை இந்த நேரத்தில் பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கின்றேன். அந்த அடிப்படையிலே அவற்றை வழங்குவதற்கு ஆணையிட்ட மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், தொகுதி மக்களின் சார்பாகவும், என் சார்பாகவும் நெஞ்சார்ந்த நன்றியைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், வையம்பாளையம் கிராமத்திலே 17 நபர்களுக்குப் பட்டா வழங்கப்படும் என்று அறிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அம்மா அவர்களுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், என்னுடைய கவுண்டம்பாளையம் தொகுதிக்குட்பட்ட பன்னிமடை ஊராட்சியிலே கணுவாய் மலைப் பகுதியில் வனத் துறைக்குச் சொந்தமான சுமார் 12 ஏக்கர் நிலத்தில் 50 ஆண்டுகளுக்கும் மேலாக 1,000 குடும்பங்கள் வீடு கட்டி வசித்து வருகின்றன. அதற்குப் பதிலாக கோப்பனேரி என்ற கிராமத்தில் வருவாய்த் துறைக்குச் சொந்தமான 24 ஏக்கர் நிலம் மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக நில அளவை செய்து வழங்கப்பட்டு...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. ஆறுக்குட்டி, சுருக்கமாகக் கேளுங்கள்.

திரு. வி.சி. ஆறுக்குட்டி: அதன் கோப்புகள், CLA அலுவலகத்திலிருந்து வருகின்றன. அவர்களுக்குப் பட்டா வழங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன். நன்றி.

முற்பகல் 10-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயம்புத்தூர் மாவட்டம், கோவை வடக்கு வட்டம், சோமையன்பாளையம் மற்றும் பன்னிமடை ஊராட்சியில் வனத் துறைக்குச் சொந்தமான கணுவாய் மலைப் பகுதியில் போளுவாம்பட்டி மற்றும் தடாகம் ஒதுக்கக் காடுகள் என்று வகைப்படுத்தப்பட்ட இடத்தில் மொத்தம் சுமார் 910 குடும்பத்தினர் சுமார் 40 ஆண்டுகளுக்கு மேலாக வீடு கட்டி வசித்து வருகின்றனர். இப்பகுதியில் வசித்துவரும் பொது மக்களுக்குக் குடிநீர், சாலை, மின்சாரம் மற்றும் போக்குவரத்து உள்ளிட்ட அனைத்து அடிப்படை வசதிகளும் உள்ளாட்சி அமைப்பினால் செய்து தரப்பட்டுள்ளன. மேலும், குடும்ப அட்டை, வாக்காளர் அடையாள அட்டை மற்றும் ஆதார் அட்டை உள்ளிட்டவையும் அரசினால் வழங்கப்பட்டுள்ளன. இப்பகுதியானது ஒதுக்கக் காடுகள் என்று வகைப்படுத்தப்பட்டிருப்பினும், இப்பகுதியையொட்டி அடர்ந்த வனமோ, விலங்குகளின் அச்சுறுத்தலோ ஏதுமில்லை. மேற்படி இடத்தில் சுமார் 910 குடும்பங்களால் வீடுகள் கட்டப்பட்டுள்ள இடமானது 7.46.5 ஹெக்டேர் பரப்பளவு கொண்டுள்ள நிலையில், வனச் சட்ட விதிகளின்படி, மேற்படி இடத்திற்கு மாற்றான இடம் வழங்கப்பட வேண்டுமென்பதால், கோயம்புத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையம் வட்டம், தோலாம்பாளையம் கிராமம், க.ச.எண் 958-ல் அமைந்துள்ள வருவாய்த் துறைக்குச் சொந்தமான தீர்வை ஏற்படாத தரிசு என்ற வகைப்பாட்டில் அமைந்துள்ள இடத்தில், 14.93.0 ஹெக்டேர் நிலம் மாற்று நிலமாக வழங்க உத்தேசிக்கப்பட்டு, இது தொடர்பாக அரசின் அனுமதி பெறப்பட்டு, கோவை மாவட்ட ஆட்சியரால், கூடுதல் தலைமைச் செயலாளர், நில நிருவாக ஆணையர் அலுவலகத்திற்கு நில பிரேரணை அனுப்பப்பட்டுள்ளது. நில நிருவாக ஆணையரிடமிருந்து உரிய கருத்துரு பெறப்பட்டவுடன், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு கனிவோடு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

2015 ஆகஸ்ட் 27]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. ஆறுக்குட்டி அவர்கள்.*

திரு. வி.சி. ஆறுக்குட்டி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டா வழங்கப்படும் என்று அறிவித்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் தொகுதி மக்களின் சார்பாகவும், என் சார்பாகவும் நெஞ்சார்ந்த நன்றியைச் சொல்லி, வாய்ப்புக்கு நன்றி கூறி அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.*

திரு. எம். ஆறுமுகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டம், அன்னூர் தாலுகாவிற்கு உட்பட்டிருக்கக்கூடிய வெள்ளக்கிணறு, உருமாண்டபாளையம், சுப்பநாயக்கன்புதூர், துடியலூர், வட்டமலைப்பாளையம் ஆகிய பகுதிகளில் வாழ்ந்து கொண்டிருக்கக்கூடிய நிலமற்ற ஏழை மக்கள் 500 பேர் கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்னால் மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே தங்களுக்கு வீட்டுமனைப் பட்டா வேண்டுமென்று கோரிக்கை மனு கொடுத்திருக்கின்றார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாவட்ட ஆட்சித் தலைவரிடத்தில் சொல்லி, வீட்டுமனைப் பட்டா இல்லாதவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமுதாயத்தில் உள்ள நலிந்த பிரிவினரின் முன்னேற்றத்திற்கு அடிப்படைத் தேவையான, வசிப்பதற்கு இடம் வழங்குவதே கருணையின் பிறப்பிடம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய புனித அரசினுடைய நிலையான கொள்கையாகும். ஒப்படை செய்ய எங்கெங்கு நிலம் உள்ளதோ, அங்கு வீட்டுமனைகளை தகுதியுள்ள நபர்களுக்கு ஒப்படை செய்து, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலோடு, வருவாய்த் துறை மக்களுக்கு உதவி செய்து வருகிறது. அந்தவகையில், வீட்டுமனை ஒப்படை, வருவாய்த் துறை,*

நிலையாணை எண் 21-ன்கீழ் வரையறைக்குட்பட்டு வழங்கப்பட்டு வருகின்றது. ஆகவே, வரையறைக்குட்பட்டு, அந்த நிலம் இருக்குமேயானால், அதை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை கனிவோடு பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பொறுப்பேற்ற இந்த நான்காண்டுகளிலே ஒவ்வோர் ஆண்டும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, அந்த இலக்கையும் கடந்து, 2011 ஆம் ஆண்டு 1 இலட்சம் என இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, 1,21,000 பேர்களுக்குப் பட்டா வழங்கப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) 2012 ஆம் ஆண்டு 1 இலட்சம் என இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, 1,31,000 பேர்களுக்குப் பட்டா வழங்கப்பட்டிருக்கிறது. அதைப்போல, 2013 ஆம் ஆண்டு 2 இலட்சம் பேர்களுக்கு என இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, 2,17,000 பேர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. கடந்த ஆண்டு, 3 இலட்சம் பேர்களுக்கு என இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, 3,81,000 பேர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆக, கடந்த நான்காண்டுகளிலே இதுவரை அன்னைத் தமிழகத்திலே அரசியல் வரலாற்றிலே இல்லாத வகையில், ஏறத்தாழ 8,50,000 ஏழை, எளியவர்களுடைய வாழ்விலே ஒளியேற்றுகின்ற வகையில், (மேசையைத் தட்டும் ஒலி) வீட்டுமனைப் பட்டா வழங்கி, சரித்திர சாதனை படைத்து, ஏழைகளின் ஏந்தலாக, ஏழைகளின் பாதுகாவலராக விளங்குகின்ற ஒரே முதலமைச்சர், நம்முடைய இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த நிதியாண்டிலேகூட, நம்முடைய இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய வழிகாட்டுதலோடு, ஏறத்தாழ 3,50,000 குடும்பங்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, அந்த இலக்கையும் தாண்டி வழங்குவதற்காக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய வழிகாட்டுதலோடு, வருவாய்த் துறை உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.